யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
## Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | கிறிஸ்தவ நாகரிகம் |
|---|---|---|

### கிறிஸ்தவ நாகரிகம் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | **1** | 11) | **3** | 21) | **3** | 31) | **2** | 41) | **4** |
| 02) | **4** | 12) | **4** | 22) | **4** | 32) | **2** | 42) | **3** |
| 03) | **5** | 13) | **3** | 23) | **2** | 33) | **1** | 43) | **3** |
| 04) | **1** | 14) | **4** | 24) | **1** | 34) | **4** | 44) | **4** |
| 05) | **5** | 15) | **1** | 25) | **3** | 35) | **2** | 45) | **2** |
| 06) | **4** | 16) | **5** | 26) | **2** | 36) | **2** | 46) | **4** |
| 07) | **3** | 17) | **3** | 27) | **3** | 37) | **2** | 47) | **3** |
| 08) | **4** | 18) | **2** | 28) | **4** | 38) | **1** | 48) | **3** |
| 09) | **2** | 19) | **2** | 29) | **2** | 39) | **5** | 49) | **1** |
| 10) | **1** | 20) | **2** | 30) | **1** | 40) | **2** | 50) | **3** |

(5 × 4 = 20 புள்ளி)

### கிறிஸ்தவ நாகரிகம் - II

பகுதி - I

01) (i)
- ✶ மறை தூதுப் பயணங்களை மேற்கொண்டு நற்செய்தி அறிவித்தமை
- ✶ தலத் திருச்சபைகளை அமைத்தமை
- ✶ மூப்பர்களை நியமித்தமை
- ✶ திருமடல்களை எழுதியமை (4 புள்ளி)

(ii)
- ✶ அறப்பணி
- ✶ நற்செய்தி அறிவித்தல்
- ✶ திருமுழுக்கு கொடுத்தல்
- ✶ புதுமைகள் செய்தல் (4 புள்ளி)

(iii)
- ✶ புனித செபஸ்தியார்
- ✶ புனித தார்சியுஸ்
- ✶ புனித தமியன்
- ✶ புனித பெலிக்ஸ்
- ✶ புனித அக்னெஸ்
- ✶ புனித லூசியா (4 புள்ளி)

(iv)
- ✶ நன்மைகள்
- ✶ கிறிஸ்தவர்களுக்கு மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது.
- ✶ குருக்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டது
- ✶ ஞாயிறு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது
- ✶ தீமைகள்
- ✶ அரசர்கள் நிர்வாகத்தில் தலையிடல்
- ✶ விசுவாசத்தில் தளர்ச்சி ஏற்பட்டது
- ✶ பேதகக் கொள்கைகள் அதிகரித்தன (4 புள்ளி)

(v) ✶ வார்த்தை கடவுளிலும் கீழானவர்
✶ மகன் நித்தியரல்லர்
✶ கடவுள் அல்லர்
✶ தந்தைக்குச் சமமானவரல்லர்
✶ அவர் படைக்கப்பட்டவர் (4 புள்ளி)

(4 × 5 = 20 புள்ளி)

02) (i) மாட்டின் லூதர், ஜோன் கல்வின், ஊல்ரிச் சுவிங்கிளி, தோமஸ் முன்ஸ்சர் (4 புள்ளி)

(ii) கனடா, குறோயீ தீவு, இந்தியா, ஜப்பான், சீனா, வட அமெரிக்கா, கொரியா (4 புள்ளி)

(iii) ✶ திரித்தெந்தின் சங்கம் கூட்டப்பட்டது.
✶ திருச்சபையின் ஒழுங்குகள், கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.
✶ வெளிநாட்டிற்கு மறைபரப்பாளர்கள் அனுப்பப்பட்டு திருச்சபையின் படிப்பினைகள் தெளிவுபடுத்தப்பட்டன.
✶ பங்குப் பணிவாழ்வு புதுப்பிக்கப்பட்டது.
✶ திருவிவிலியத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. (4 புள்ளி)

(iv) ✶ மனித சுதந்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
✶ திருவிவிலியம் விசுவாசத்தின் அடிப்படையாக அமைந்தது.
✶ நடுத்தர வகுப்பினர் உருவாயினர்.
✶ கல்வி தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழி வகுத்தது. (4 புள்ளி)

(v) படைத்தவரான இறைவன், கிறிஸ்துவல் இறைவன் வழங்கும்மீட்பு, தூய ஆவி, திருச்சபை (4 புள்ளி)

(4 × 5 = 20 புள்ளி)

03) (i) ✶ மறைத்தூதுவர்களின் ஆழ்ந்த அர்ப்பணிப்பும் முயற்சியும்
✶ மறைத்தூதுவர்களுக்கு போர்த்துக்கேய ஆட்சியாளரிடமிருந்து கிடைத்த உதவி
✶ தேசிய மொழியைக் கற்று அம்மொழிகளிலேயே மறையை பிரச்சாரம் செய்தல்
✶ ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தல்
✶ இரக்கப் பணிகள்
✶ எளிமையான வாழ்க்கை (4 புள்ளி)

(ii) அன்பின் கன்னியர் சபையினர், நல்லாயன் கன்னியர் சபையினர், திருக்குடும்ப கன்னியர் சபையினர், பிரான்சிஸ்கன் சபை சகோதரிகள் (4 புள்ளி)

(iii) ✶ கத்தோலிக்கரின் விகிதாசாரத்திற்கேற்ப பாடசாலைகள் அதிகரிக்கப்படவில்லை.
✶ உயர் கல்லூரிகள் மூன்று மாத்திரம் இருந்தன.
✶ பாடசாலைகள் எல்லாம் சமயக் கலையை மையமாகக் கொண்டே இயங்கின.
✶ இடைநிலைப் பாடசாலைகள் இருக்கவில்லை. (4 புள்ளி)

(iv) ✶ கொஸ்னர் நற்செய்தி லூத்தரன் சபை
✶ ஜெய்ப்பூர் நற்செய்தி லூத்தரன் சபை
✶ ஆந்திரா நற்செய்தி லூத்தரன் சபை
✶ வடக்கு நற்செய்தி லூத்தரன் சபை (4 புள்ளி)

(v) ✶ திருப்பலிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை.
✶ வழிபாடுகள், பக்திமார்க்கங்களிற்கும் கொண்டாட்டங்களிற்கும் முக்கியத்துவம் வழங்கப் பட்டது.
✶ புனிதர்களின் வணக்கம் சிறப்பிடம் பெற்றது.
✶ திருயாத்திரைகளுக்கு சிறப்பு அளிக்கப்பட்டமை. (4 புள்ளி)

(4 × 5 = 20 புள்ளி)

## பகுதி - II

*04)*

(i) புனித பக்கோமியஸ் குழு வாழ்க்கை நடாத்தும் துறவிகளுக்கான சட்டங்களை அறிமுகம் செய்ததாக கூறப்படுகிறது. அதன்படி

- ✶ துறவிகள் தனிமையில் வாழ்ந்தாலும், பொதுச் சட்டம் ஒன்றிற்கு உட்பட்டிருந்தார்கள்.
- ✶ செபம், நற்செய்தியை வாசித்தல், உழைப்பைப் பயன்படுத்தி வேலை செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

புனித பசில் மடவாழ்வை ஒழுங்கானமுறையில் திட்டமிடுவதின் குறிக்கோளுடன் சட்டக்கோவை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. அதில்

- ✶ துறவிகள் ஒரே இல்லத்தில் வாழ்ந்தார்கள்.
- ✶ குழு வாழ்க்கை
- ✶ உடல் உழைப்பைப் பயன்படுத்தி வேலை செய்ய வேண்டும்.
- ✶ ஒழுங்கமைக்கப் பெற்ற வாழ்க்கைமுறை இருந்தமை *(5 புள்ளி)*

(ii) ஆசீர்வாதப்பர் எடுத்துக்காட்டிய சட்ட ஒழுங்குகளை அவ்வாறு செயற்படுத்தி திருச்சபையின் ஆன்மீக மறுமலர்ச்சியைக் கட்டி எழுப்பும் நோக்கத்துடன் 'குளுணி' துறவறசபை உருவானது. *(2 புள்ளி)*

- ✶ ஆச்சிரம வாழ்க்கை நடாத்துதல்
- ✶ தப செயல்களில் ஈடுபடல்
- ✶ தூய வாழ்க்கை
- ✶ மறைஉரை வழங்கி இடத்திற்கு இடம் செல்லுதல்
- ✶ நீண்ட நேரத்தை செபத்தில் செலவிடல்
- ✶ எளிமையான, தூய்மையான வாழக்கை நடாத்துதல் *(3 புள்ளி)*

*(2 + 3 = 5 புள்ளி)*

(iii) பிரான்சிஸ் லயன்சில் பீட்டர் வல்சோ என்பவரின் செயற்போக்குக் காரணமாக வல்தேசியன் ஆரம்பிக்கப்பட்டது.

- ✶ அநியாய வட்டிக்குப் பணம் கடன் கொடுத்து வாழ்ந்த செல்வந்த வியாபாரி
- ✶ மத். 19 : 21 நற்செய்தி வசனம் அவருடைய ஆன்மீக வாழ்வை மாற்றியமைத்தது.
- ✶ இறைவார்த்தையின் படி தமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தினார்.
- ✶ இதன் காரணமாக இவரைப் பின் தொடர்ந்து பலர் அவரோடு சேர்ந்து கொண்டதன் காரணமாக அவர்கள் வல்தேசியன் என்னும் பெயருடன் மக்கள் மத்தியில் சேவையில் ஈடுபட்டனர். *(5 புள்ளி)*

(iv)
- ✶ செபமும் வேலையும் எனும் கருத்தை தமது விருதுவாக்காகக் கொண்டிருந்தனர்.
- ✶ உரோமையர்கள் உடல் உழைப்பை இழிவான செயல் எனவும், அடிமைகளே இவற்றைச் செய்ய வேண்டும் எனக் கருதினார்கள்.
- ✶ மக்கள் மத்தியில் உழைப்பின் மேன்மையை உணர்த்துவது துறவிகளின் முக்கிய பணியாகக் கொள்ளப்பட்டது.
- ✶ புனித ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள் கடும் உழைப்பை மேற்கொண்டனர். இச்செயல் உழைப்பின் மேன்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. இக்கருத்தியல் மேலைத்தேசமெங்கும் உடல் உழைப்புப் பற்றி, உயர்ந்தமதிப்பையும் பண்பையும் உருவாக்கியுள்ளது.
- ✶ துறவிகள் பெரும்பாலும் காடுகளை அழித்து, சிறந்த விவசாய நிலங்களாக மாற்றியுள்ளனர்.

- ✶ துறவிகள் எல்லாத் தொழிலையும் சமமாகக் கருதினர். உ+ம்: கால்நடை வளர்த்தல், பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல் நெசவு போன்றன
- ✶ மக்களால் உயர்ந்தவர்களாக கற்றவர்களாக கருதப்பட்ட துறவிகள் உடல் உழைப்பில் ஈடுபட்டமை பெரும் எடுத்துக் காட்டாக கொள்ளப்பட்டது.
- ✶ புதிய தொழில்நுட்ப முறைகளையும் அறிமுகப்படுத்தினர் *(5 புள்ளி)*

*(5 × 4 = 20 புள்ளி)*

*05)*

(i) பெந்தக்கோஸ்து நிகழ்வை பாபேல் கோபுர நிகழ்வுடன் ஒப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.

(ii)
- ✶ கி. பி. 46 - 49 இல் பவுலின் 1ம் பயணம் ஆரம்பமாகியது.
- ✶ பயணத்தோழர்கள் பர்னபா, யோவான் மாற்கு
- ✶ அந்தியோக்கியா சபையில் ஆரம்பமாகியது.
- ✶ சைபிரஸ் தீவிற்கும் சின்ன ஆசியாவிலுள்ள நகரங்களுக்கும் சென்றார். சாலமி, பஸ்போ, பெருகை, பிசிதியா அந்தியோக்கியா, இக்கோனியா லிஸ்திரா, தெருவை ஆகிய இடங்களில் பணியாற்றினார்.
  (மேற்கூறப்பட்ட இடங்களில் முக்கிய நிகழ்வுகளும் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

(iii)
- ✶ கிறிஸ்தவர்கள் கிறிஸ்து ஒருவரே ஆண்டவர் மீட்பர் என விசுவசித்தனர். எனவே பிற தெய்வங்களை வழிபடவோ, தூபம் காட்டவோ முன்வரவில்லை.
- ✶ கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை இரவில் இரகசியமாக மேற்கொண்டனர்.
- ✶ கிறிஸ்தவர்கள் திவ்விய நற்கருணை உட்கொள்வதைத் தவறாகப் புரிந்து கொண்டனர்.
- ✶ இயேசுவின் வல்லமையால் நோயாளிகளைக் குணமாக்கியதைக் கண்டு மாயவித்தைக் காரர் என பெயர் சூட்டப்பட்டனர்.
- ✶ இறையரசு முடிவில்லாதது என்'ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உரோமையர்களுக்கு எரிச்சலை மூட்டியது. *(5 புள்ளி)*

(iv) கொன்ஸ்தாந்திநோபிள் ஆயர் நெஸ்ரோரியர், 'இயேசு இரண்டு ஆட்களாக இருக்கிறார்' என்றும் 'மனிதக் கிறிஸ்து கடவுள் அல்ல' என்றும் தப்பறையை வெளியிட்டார். கி. பி. 431 இல் கூடிய எபேசு சங்கம் இப் பேதகத்தைக் கண்டித்தது. *(5 புள்ளி)*

*(5 × 4 = 20 புள்ளி)*

*06)*

(i)
- ✶ தேசிய பண்பாட்டை மதித்தல்
- ✶ கலையிலும் விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற உதவியாளர் ஒருவரைத் தம் சபைக்கு அழைத்துக் கொண்டமை.
- ✶ சீன அறிஞர்களின் ஆடை அணிந்து சீனப் பழக்க வழக்கங்களை பின்பற்றியமை
- ✶ வான சாஸ்திரம் தொடர்பான உரைகளை நிகழ்த்தியமை
- ✶ இயேசு சபையின் அங்கத்தவர் பழைமை சீன கலாசாரத்தை மதித்து அதில் சில முறைகளைத் தங்களுடைய சமய ஒழுங்கு முறைகளுடன் சேர்த்துக் கொண்டனர்.

(ii) கொரியா வடக்கு, தெற்கு எனப் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட கொரிய யுத்தமாகும். (இதன் பிரதிபலன் குறிப்பிட்டு எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

(iii)
- ✶ திருச்சபையும் நாடும் வேறாக்கப்பட்டு மதம் பாடசாலைகளிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டது.
- ✶ ஜனநாயகம் சுதந்திரம் போன்ற கருத்துக்கள் முதன்மை பெற்றன.
- ✶ திருச்சபையின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது.

* உள்ளூர் அழைத்தல் ஊக்குவிக்கப்படவில்லை.
* ஸ்பெயின் நாட்டுத் துறவிகள் பெருவாரியாக சொந்த நாட்டிற்கு செல்லத் தொடங்கினர்
* சமய சார்பற்ற கல்வி முறையானது விசுவாச வாழ்வில் அறியாமையைத் தோற்றுவித்தது
* கி. பி. 1902 - 1904 இடைப்பட்ட காலப்பகுதியில் கத்தோலிக்க திருச்சபையில் பிளவு ஏற்பட்டது. *(5 புள்ளி)*

(iv)
* புரொட்டஸ்தாந்தின் சபையினர் 1861 இல் யப்பானுக்கு வந்த பிறெஸ்பிற்றேரியன் மறைபோதகரான டி வி பெத்தூன் மக்கார்த்தி என்பவரே முதன்முதலாக ஜப்பானுக்கு வந்த புரொட்டஸ்தாந்து மறைபரப்பாளராவார்.
* 1937 இல் ஜப்பானிய வேதாகமச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
* ஜப்பானில் மிக உயர்ந்த கல்வித் திட்டம் நடைபெற்றதுடன் மிஷனரிகளின் மேற்கத்திய கல்வி முறையை ஜப்பான் மக்களால் ஏற்றுக்கொள்ளக் காரணம் அப்போது அவர்கள் தொழில்நுட்பம் தொடர்பான கல்வியை கற்க வேண்டிய தேவையிருந்தமை.
* கத்தோலிக்க ஆலயங்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பிற்காலத்தில் ஜப்பானிலுள்ள மிக உயர்தர பாடசாலைகளாக பிரசித்தி பெற்று மிக உயர்ந்த பல்கலைக்கழகங்களாக மாறின. *(5 புள்ளி)*

*(5 × 4 = 20 புள்ளி)*

07)

(i) டொம் லோறன்ஸோ டி அல்மெய்டா தலைமையில் போர்த்துக்கேயர் முதல்முறையாக இலங்கையில் வந்திறங்கிய போது இலங்கை மூன்று தனி அரசுகளாக பிரிக்கப் பட்டிருந்தமை

* இலங்கையில் தென்மேற்குப் புறத்தில் சிங்கள கோட்டே அரசும், மத்திய மலைப்பிரதேசத்தில் சிங்கள கண்டி அரசும், வடக்கில் தமிழ் யாழ்ப்பாண அரசுமாகும்.
* 9ம் தர்மபராக்கிரமபாக (கி.பி. 1469 - 1511) கண்டியையும், பரராஜசேகரன் (கி.பி. 1478 - 1519) வடக்கையும் ஆண்டு வந்தனர்.

**சமய நிலை :-**
* பௌத்த மதத்தை அடிப்படையாக் கொண்ட சமூக அமைப்பு காணப்பட்டது.
* பௌத்த விகாரை கிராமத்தின் ஆன்மீக நிலையம் என்பதுடன் அதன்மூலம் மேலான கலாசாரத்திற்கு வழிவகுத்தது.
* விகாரையுடன் நட்புறவு கொண்டிருந்த காலத்தில் நாட்டின் வளர்ச்சி அமைதி பாதுகாத்தல் போன்றவை அரசின் முக்கிய கடமைகளாக கருதப்பட்டது. *(5 புள்ளி)*

(ii)
* மன்னார் மறை சாட்சிகள்
* விதிய பண்டார துன்புறுத்தல்கள்
(இவை இரண்டும் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

**(iii) மதம் :-**
* ஒல்லாந்தர் போதித்தது 'ஜோன் கல்வினின்' சீர்திருத்த சபையின் மதம்
* மறைபணியாளர்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டமை. அவற்றிற்கு கல்வின் சபைக் குருக்களே பொறுப்பாக இருந்தனர்.
* ஆன்மீகச் செயற்பாடுகளை வளர்ப்பதற்கு பல ஒல்லாந்த தேச குருக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமை
* குருமடங்கள் நிறுவியமை
* மறைநூல்கள் அச்சிட்டமை

**கல்வி :-**

- ✶ இவர்கள் காலத்தில் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✶ ஆண், பெண் பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்க வற்புறுத்தப்பட்டனர்.
- ✶ போதகரும் மறையாசிரியர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களாக கடமையாற்றினர்.
- ✶ இலங்கையில் முதன் முதலில் கல்வி நிர்வாக முறையை ஏற்படுத்தியவர் ஒல்லாந்தரே
- ✶ நான்கு முறையான பாடசாலை முறைமைகள் காணப்பட்டன.

(iv) விடைக்கேற்ப புள்ளிகள் வழங்கவும் *(5 புள்ளி)*

*(5 × 4 = 20 புள்ளி)*

*08)*

(i) மொசப்பத்தேமி நாகரிகம் விளக்கி எழுதியிருப்பின் *5* புள்ளி வழங்கவும்

(ii)
- ✶ கி. மு. *336 - 363* பாலஸ்தீன நாட்டை பேரரசர் மகா அலெக்ஸ்சாண்டர் கைப்பற்றல்
- ✶ கிரேக்க கலாச்சாரமும் வாழ்க்கை முறையும் யூதர்களைப் பாதித்தது.
- ✶ பல நகரங்கள் கிரேக்கப் பெயருக்கு மாற்றப்பட்டன.
- ✶ கட்டிடங்கள் கலைக்கூடங்கள் விளையாட்டுத் தலங்கள்
- ✶ கிரேக்க மருத்துவத்தையும் யூதர்கள் விரும்பி ஏற்றனர்.

(iii)
- ✶ கிறிஸ்து இவ்வுலகில் நிலைநாட்ட முனைந்தது கடவுளின் அரசு
- ✶ அதற்குரிய விதிமுறைகளை சொல்வடிவில் மட்டுமன்றி செயல் வடிவிலும் செயற்படுத்தினார். நீதி, சமத்துவம், அன்பு, பரிவு, இரக்கம், தாழ்ச்சி, பகிர்வு, ஒற்றுமை மன்னிப்பு போன்ற பண்புகளை யூத சமூகத்தில் செயற்படுத்தி புதிய நாகரிகத்தை தோற்றுவித்தார்.
- ✶ அவர் பிறப்பு வாழ்வு பணி பாடுகள், மரணம் உயிர்ப்பு யாவும் இத்தகைய பண்புகளைக் கொண்டு அமைந்தமை *(5 புள்ளி)*

(iv) திருத்தொண்டர்கள் அறப்பணி, மூப்பர்கள் நியமிக்கப்படல், பெந்தக்கோஸ்து விழா, ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை குறிப்பிட்டு விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்

*(5 × 4 = 20 புள்ளி)*